P1-A

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

G. C. E. Ordinary Level | க.பொ.த. சாதாரண தரம் | **2022 (2023)**

# Student Seminar Series

## மாணவர் கருத்தரங்கு தொடர்

Practice Paper | முன்னோடி வினாப்பத்திரம்

# Drama & Theatre

# நாடகமும் அரங்கியலும்



**Answer Sheet - I, II** | **விடைத்தாள் - I, II (மொழிமூலம்-தமிழ்)**

Nenasa

The National e-learning Portal for The General Education

தொலைக்கல்வி மேம்பாட்டு பிரிவு | கலைப்பிரிவு

## பத்திரம் - I - விடைப்பத்திரம்

| வினா இல. | விடை இல | வினா இல. | விடை இல | வினா இல | விடை இல | வினா இல. | விடை இல |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 4 | 21. | 2 | 31. | 3 |
| 02. | 2 | 12. | 2 | 22. | 4 | 32. | 2 |
| 03. | 3 | 13. | 1 | 23. | 4 | 33. | 2 |
| 04. | 1 | 14. | 2 | 24. | 2 | 34. | 1 |
| 05. | 1 | 15. | 1 | 25. | 1 | 35. | 3 |
| 06. | 3 | 16. | 4 | 26. | 3 | 36. | 4 |
| 07. | 1 | 17. | 2 | 27. | 4 | 37. | 3 |
| 08. | 2 | 18. | 1 | 28. | 2 | 38. | 1 |
| 09. | 4 | 19. | 3 | 29. | 3 | 39. | 3 |
| 10. | 3 | 20. | 1 | 30. | 1 | 40. | 4 |

## நாடகமும் அரங்கியலும் - II (விடைப்பத்திரம்)

1.

i. நாடகத்தைப் பார்த்து நயந்து, தானும் அதில் பங்கேற்று நடிப்பவர்.

ii. ஒளியின் செறிவைக் கூட்டிக் குறைப்பது.

iii. கூத்தர்களுக்கு மேற்கொள்ளப்பெறுகின்ற ஒப்பனை மாத்துப் பூசுதல் எனப்படும்.

iv. யதார்த்த விரோதம்/ மோடியுற்ற மோடி.

v. வில்லிசை/ கதாப்பிரசங்கம்/ சிலம்பம்.

vi. பாண்டவர் வனவாசம்.

vii. நாடகத் தயாரிப்பாளர்.

viii. வானொலி நாடகம் / வானொலி வழியாகவோ இறுவட்டுக்கள் வழியாகவோ நுகரப்பெறுகின்ற இசை / பாடல்.

ix. பாத்திரங்கள் வழியாகக் கதை நகர்த்தப்பெறுதல்.
சொல்லாடல்கள் பயன்படுத்தப்பெறுதல்.
பாத்திர உணர்ச்சிகள் வெளிப்படுத்தப்பெறுதல்
பெரும்பாலும் தொடக்கம் - நடு - முடிவு என்கிற கட்டமைப்பைக் கொண்டிருத்தல்.
( 02 புள்ளிகள்)

x. தனி ஊமம், கூட்டுமம். ( 02 புள்ளிகள்)

2. (i)

- நாடகத் தயாரிப்பின் அனைத்துக் கூறுகளையும் ஒருங்கிணைத்து ஒரு
- முழுமைப்படுத்தப்பெற்ற கலைப் பார்வையை அளிக்கும் கலை.

- நிறைவு செய்யப்பெற்ற தயாரிப்பிற்குள் ஒருங்கிணைந்த பார்வையைக் கொண்டு வருகின்ற செயற்பாடு.

- நாடக ஆசிரியரின் கருத்தை அன்றேல் நெறியாளரின் மனதில் இருக்கின்ற கருத்திற்குக் காட்சி வடிவம் அளிக்கின்ற ஒரு கலைத்துவச் செயற்பாடு.

- எழுத்துரு வடிவத்திலோ எண்ண வடிவத்திலோ அமைந்திருக்கும் ஒரு விடயத்தை ஆற்றுகை வடிவில் கொண்டு வருகின்ற கலைத்துவச் செயற்பாடு.

(04 புள்ளிகள்)

(ii)

- எழுத்துரு வாசிப்பும் பகுப்பாய்வும்
- நடிகர் தெரிவும் நடிபாகம் அளித்தலும்
- ஒத்திகைச் செயற்பாடுகள்.
- அரங்கக் கூறுகளை ஒருங்கிணைத்தல்
- ஆற்றுகை.
- மதிப்பீட்டில் பங்கேற்றுக் கருத்துக்களைச் செவிமடுத்தல் (04 புள்ளிகள்)

(iii) தமது நாடக ஆற்றுகைக்காக நடிகர்களைத் தெரிவுசெய்வதற்காக நியமத் தெரிவுமுறைகளான திறந்த, மூடிய, சல்லடைத் தெரிவுமுறைகளையும் ஊமம், புதிதளித்தல் போன்ற நியமமில்/ விசேட தெரிவுமுறைகளையும் பயன்படுத்திய விதம் பற்றியும் குறிப்பிடுதல் வேண்டும். (04 புள்ளிகள்)

3. (i) **நடிகருக்கான பயிற்சிகள்**

- உடலை முனைப்புறுத்தும் பயிற்சிகள்
  - அரங்க விளையாட்டுக்கள்,
  - உயிர்ப்பூட்டும் பயிற்சிகள்
  - தளர்நிலைப் பயிற்சிகள்
  - சாகச விளையாட்டுக்கள்
  - ஆடல் மற்றும் ஆடலன்ன அசைவுகள்
- குரலை முனைப்புறுத்தும் பயிற்சிகள்
  - ஸ்வரப் பயிற்சி
  - அகார, உகார, இகாரப் பயிற்சி
  - மூச்சுப் பயிற்சிகள்
  - பேச்சு நுட்பங்களைப் பயிலுதல்
  - அரங்க விளையாட்டுக்கள்.
- உளத்தை முனைப்புறுத்துதல்
  - அவதானம், கிரகித்தல் கருத்தூன்றல், நினைவாற்றல் விருத்தி, புலனுறுப்புக்களை விருத்தி செய்தல் என்பவற்றிற்கான பயிற்சிகள் - அரங்க விளையாட்டு, தியானம்

இவற்றுள் யாதாயினும் இரண்டைக் குறிப்பிடுதல் போதுமானதாகும். வேறு பொருத்தமான விடைகளையும் எழுத முடியும்.

**நடிப்பிற்கான பயிற்சிகள்**

- போலச்செய்தல்
- புதிதளித்தல்கள்
- படிமமாக்கற் பயிற்சிகள்
- மேடை அசைவியக்கப் பயிற்சிகள்
- வகிபாகச் சித்திரிப்புக்கள்
- உணர்ச்சி ஞாபகப் பயிற்சி
- ஊமச் சித்திரிப்பு.

இவற்றில் யாதாயினும் இரண்டைக் குறிப்பிடுதல் போதுமானதாகும். வேறு பொருத்தமான விடைகள் இருப்பின் அவற்றையும் குறிப்பிடத் தடையேதுமில்லை.

நடிகருக்கான பயிற்சிகள் இரண்டிற்கு (02 புள்ளிகள்)
நடிப்பிற்கான பயிற்சிகள் இரண்டிற்கு (02 புள்ளிகள்)

(ii) ஆரொடு நோகேன் நாடகத்தில் இடம்பெறும் 11 பாத்திரங்களில் பரீட்சார்த்தி ஏற்று நடித்த யாதாயினும் ஒரு பாத்திரத்தின் பெயரைக் குறிப்பிட வேண்டும். (01 புள்ளி)

- அந்தப் பாத்திரத்தை ஏற்று நடிப்பதற்கு, மேல்வரும் நடிப்பு நுட்பங்களில் தாம் கைக்கொண்ட நுட்பங்கள் நான்கைக் குறிப்பிட வேண்டும். (04 புள்ளிகள்)
  - ஊமம்
  - போலச்செய்தல்
  - புதிதளித்தல்
  - ஸ்ரனிஸ்லவஸ்கியின் IF, அகத்தில் இருந்து புறத்திற்கும் புறத்தில் இருந்து அகத்திற்கும் செல்லுதல்.
  - பிரெக்ஃடின் அந்நியமாதல் நடிப்பு நுட்பம்
  - ஒகஸ்தாபோலின் படிமமாக்கல் நுட்பம்
  - மெய்நிலை
  - மட்டம்
  - பரப்பு
  - சமநிலை
  - திசை

(iii). அரங்கப் பயிற்சிகள் பரீட்சார்த்தியின்

- ✓ தலைமைத்துவம்
- ✓ முன்மயற்சி
- ✓ வெற்றி தோல்விகளைச் சமமாகப் பார்த்தல்
- ✓ நேரமுகாமைத்துவம்
- ✓ கூட்டுச் செயற்பாடு
- ✓ தொடர்பாடல் வன்மை

போன்ற பலவேறு ஆளுமை விருத்திக்கு உதவிய சந்தர்ப்பங்கள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்கம் தந்தால் :- (2x2=04 புள்ளிகள்)

சந்தர்ப்பங்கள் என்னும் போது

- ✓ போட்டிகளில் பங்கேற்றல்
- ✓ பலவேறு செயற்பாடுகளுக்குத் தானாகவே முன்வந்து செயற்பட்டமை, தலைமை
- ✓ தாங்கிச் செயற்பட்டமை, தோல்விகளைப் பொறுத்துக் கொண்டமை. மற்றும் பிற.

4. (i) **புதியதொரு வீடு நாடகத்தின் மையக்கரு:-** எத்தகைய துயர் வந்த போதிலும் சோர்ந்து விடாது துணிந்து முன்செல்லவேண்டும்.

**மோதுகை:** இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையிலான முரண்நிலை.

(02 x2= 04 புள்ளிகள்)

(ii) இங்கு பரீட்சார்த்தி தன்னை மயிலியாகக் கொண்டு சிந்திக்கும் போது, எடுக்கக்கூடிய தீர்மானத்தின் அடிப்படையில் பொருத்தமான உணர்ச்சிகள் வெளிப்படும் வகையில் சொல்லாடல்களை எழுத வேண்டும். அப்போது மயிலியுடன் தொடர்புபடும் பாத்திரங்களின் சொல்லாடல்களையும் சேர்த்து எழுதுவதுடன் செயலியக்கங்களுடன் தொடர்படைய மேடைக்குறிப்புக்களையும் எழுத வேண்டும்.

மயிலி எடுக்கக்கூடிய தீர்மானத்திற்கு (02 புள்ளிகள்)
பொருத்தமான சொல்லாடற் பகுதிக்கு (02 புள்ளிகள்)

(iii) நாடகத்தின் மையக்கரு, எதிர்ப்படும் இன்னலைக் கண்டு சோர்ந்துவிடாது முன்செல்ல வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இதனை அழுத்தம் திருத்தமாக உறுதிப்படுத்தும் இடமாக, ''மாண்டது போல மயங்கி வீழ்ந்திடில் நாம் மனிதரா? மறுபடியும் துணிவோம்'' என்ற மாயனின் கூற்று அமைந்துள்ளது.

ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு தனது மனைவி, பிள்ளையைப் பார்க்கும் ஆவலுடன் வரும் மாயன் அவளைத் தனது தம்பியின் மனைவியாகவும் இன்னொரு குழந்தைக்குத் தாயாகவும் கண்ட போது அதிர்ந்து போகிறான். அதேசமயம் மயிலியும் பெரும் உளநெருக்கடிக்கு உள்ளாகிறாள். எத்தகைய தீர்மானத்திற்குப் போவது என்கிற வாழ்வியல் நெருக்கடி அவளுக்கு உருவாகிறது. அந்தச் சமயத்தில் மாயனின் மேற்படி கூற்றும் அவன் எடுக்கின்ற தீர்மானமும் மயிலியின் நெருக்கடியைத் தணிக்கின்றன. வாழ்க்கை வாழ்வதற்கே என்பது நாடகத்தின் கரு வழியாகவும் மாயனின் கூற்று வழியாகவும் உறுதிப்படுத்தப்படுகிறது.

(04 புள்ளிகள்)

5. (i) காத்தவராயன் கூத்து, வடமோடி, தென்மோடி, நாட்டை, வசந்தன் கூத்து.

(04 புள்ளிகள்)

(ii) **காத்தவராயன் கூத்து**

- சிவனுக்கும் முத்துமாரியம்மனுக்கும் பிறந்த காத்தவராயன் ஆரியப்பூமாலையை மணம்புரியத் தனது தாயார் வைக்கும் பரீட்சைகளில் வெற்றிபெற்று, ஆரியப்பூமாலையைத் திருமணம் செய்தலே காத்தவராயன் கூத்தின் கதையாகும்.
- நாடகம் ஒன்றுக்குரிய முழுக்கதை வெளிப்பாடும் தொடக்கம் - நடு – முடிவு என்ற கட்டமைப்பும் இக்கூத்தில் அமைந்துள்ளது.
- முத்துமாரியம்மன் காத்தவராயனுக்கு வைக்கும் பரீட்சையும் ஒவ்வொன்றிலும் காத்தான் வெற்றிபெறுவதும் நடைபெறுவதன் ஊடாக நாடக முரண் வளர்த்தெடுக்கப்பெற்று அவன் கழுமரத்தில் ஏறுவதுடன் உச்சக்கட்டத்தை அடைகிறது. காத்தவராயன் தந்திரமாக டாப்பர் மாமாவைக் கழுமரத்தில் ஏற்றிவிட்டுத் தான் தப்புவதன் மூலம் நாடகமுரண் தீர்க்கப்படுகிறது.
- சிந்துநடையில் அமைந்த பாடல்களே காத்தவராயன் கூத்தின் அவைக்காற்று முறையில் முதன்மை அம்சமாகும். சிந்துநடைக்கு அமைய இலகுவான துள்ளல் நடையில் இந்தக் கூத்து ஆற்றப்படுகிறது.
- சிவன், முத்துமாரியம்மன், வல்லத்தம்மன் காளி, காத்தான், தொட்டியத்துச் சின்னான், ஆரியப்பூமாலை, வளையல் செட்டி. டாப்பர் மாமா போன்ற பாத்திரங்கள் இடம்பெற்றுள்ளன.
- பாத்திரச் செயலியக்கங்களுக்கு உடுக்கு பின்ணியாகத் தொழிற்படுகிறது.
- படச்சட்ட மேடையின் கட்டமைப்பிற்குள் காட்சிகளுக்குரிய களங்களை விளக்கும் காட்சித் தட்டிகளுடன் ஆற்றுகை நடைபெறும்.

**வடமோடிக்கூத்து**

- பெரும்பாலும் உயர்த்தப்படாத வட்டக்களரியில் ஆடப்படுகிறது.
- பிரதானமாக புராண, இதிகாசங்களில் வருகின்ற கதைகளே நிகழ்த்தப்பெறுகின்றது.
- கொலுத்தன்மையுடைய ஆடல்கள் காணப்படும்.
- மூன்று காலங்களிலும் ஆட்டத்தை வேகப்படுத்தி ஆடும் வழக்கம் காணப்படுகிறது.
- கூத்தை அண்ணாவியார் வழிநடத்துவார். அவர் உள்ளிட்ட சபையோர் களரியின் ஒரு புறத்தில் அமர்ந்திருப்பர்.
- மத்தளமும் சல்லரியும் வாத்தியங்களாக அமையும்.

**தென்மோடிக் கூத்து**

- பெரும்பாலும் நாவாந்துறை பாஷையூர் போன்ற கரையூர்ப் பிரதேசங்களில் ஆடப்பெறுகின்றது.
- கத்தோலிக்கக் கதைகளே தற்போது பெரிதும் நிகழ்த்தப்பெறுகின்றது. அதனால் பாரம்பரியத் தென்மோடி மரபில் இருந்து பல மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது. பிரதானமாக ஆட்டம் குறைக்கப்பட்டுள்ளது.
- விருத்தம், அகவல், கொச்சகம், பரணி, தாழிசை என்கிற பாவினங்களில் பாடல்கள் பாடப்பெறுகின்றன.
- கத்தோலிக்கக் கருப்பொருளில் அமைந்த கூத்துக்கள் அதிகம் ஆடப்பெற்றாலும் நாவல்கள், வரலாற்றுக் கதைகள் போன்றவையும் பயன்படுத்தப் பெற்றுள்ளன.
- அதிகம் படச்சட்ட மேடையிலேயே ஆடப்பெறுகின்றது.
- ஹார்மோனியம், மிருதங்கம் போன்ற இசைக்கருவிகளின் பயன்பாடு காணப்பெறுகின்றது.

**நாட்டை**

- கதிரைப் பூசையுடன் ஆரம்பமாகும்.
- சிறு பந்தல் போன்ற அமைப்பே இதன் அரங்கவெளி ஆகும்.
- யாழ்ப்பாணம், பருத்தித்துறைப் பிரதேசத்தில் நிகழ்த்தப்பெறுவதாகும்.
- புழுதிக்கூத்து எனவும் அழைக்கப்பெறுகின்றது.
- செட்டி வர்த்தகன் என்ற நாடகம் நாட்டையில் நிகழ்த்தப்பெறுகின்றது.

**வசந்தன் கூத்து**

- மழை வேண்டி நிகழ்த்தப்பெறுவதாகும்
- மட்டக்களப்பு வசந்தனைப் போலன்றி வளர்ந்தோரினால் ஆடப்பெறுகின்றது.
- கோயில் முற்றமே இதன் ஆற்றுகை வெளி ஆகும்.
- மத்தளமும் சல்லரியும் வாத்தியங்களாகும்.
- வேளாண்மையுடன் தொடர்புடைய அசைவுகள் சிறு கோல்கள் மூலம் சித்திரிக்கப்பெறும்.
- இங்கு பெரும்பாலும் வளர்ந்தோரே தற்போது வசந்தன் கூத்தை ஆடுகிறார்கள்.

(2x2=04 புள்ளிகள்)

(iii) **கட்டியகாரனும் எடுத்துரைஞரும்**

- வடமோடி, தென்மோடிக் கூத்துக்களில் கட்டியகாரன் நாடகத்தைத் தொடக்கி வைப்பவனாக இருப்பது மரபாகும். அதேசமயம் எல்லாக் கூத்துக்களிலும் கட்டியகாரன் காணப்படவுமில்லை.
  நவீன நாடக எடுத்துரைஞர் கட்டாயம் நாடகத்தைத் தொடக்கி வைப்பவனாக இருக்க வேண்டுமென்ற மரபு காணப்படவில்லை.
- கட்டியகாரன் கூத்தில் அரசனின் வருகையை அறிவித்துக் கட்டியம் கூறுபவனாக இருக்கிறான்.
  நவீன நாடகங்களில் இது மரபாகப் பின்பற்றப்படவில்லை. என்றாலும் நாடக ஆசிரியர் மற்றும் நெறியாளரின் கற்பனைக்கு ஏற்ப, எடுத்துரைஞர் ஏதாவதொரு பாத்திரத்தின் அன்றேல் ஒரு பாத்திரக் குழுமத்தின் வரவை எடுத்துரைப்பவனாகத் தொழிற்படலாம்.

- கூத்தில் கட்டியகாரன் கதைக்களத்தைப் பார்ப்போர் மனதில் கொண்டு வருபவனாகத் தொழிற்படுவான். கூத்தில் காட்சிவிதானிப்பிற்கு இடமில்லையாதலால் கதைக்களத்தை முன்வைக்க வெண்டிய தேவை ஏற்படுகிறது.
  நவீன நாடகங்களில் எடுத்துரைஞருக்கு இப்பணி கையளிக்கப்பெறவில்லை. அங்கு பலவிதமான காட்சிவிதானிப்புகளுக்கு இடமிருப்பதனால் கதை நிகழும் களத்தை எடுத்துரைக்கும் அவசியம் அங்கு ஏற்படவில்லை.
- கூத்தின் கட்டியகாரன் பார்ப்போரை நாடகம் பார்க்க ஆயத்தம் செய்கிறான். இதே பணியை நவீன நாடக எடுத்துரைஞரும் செய்கிறார்.

(2x2= புள்ளிகள்)

6. (i) **ஐதிகம்**

சிலுவை மரணம் மற்றும் உயிர்த்தெழுதலே பாஸ்காவாகும். கிறிஸ்தவர்களின் தவக்காலப் பகுதியில் 40 நாள்கள் நோன்பிருந்து நிகழ்த்தப்பெறும் சடங்கு இதுவாகும். கடவுள் உலகத்தை நீதியாக நியாயம் தீர்ப்பார் என்ற நம்பிக்கை தான் பாஸ்காவிற்கு அடிப்படை. இயேசு யூதாசினால் காட்டிக் கொடுக்கப்பட்டுச் சிலுவையில் அறையப்பட்டதும் அவர் மூன்றாம் நாள் மீளுயிர்த்ததுடனும் தொடர்புடைய பாடுகளை மீள நிகழ்த்துவதன் மூலம் தமது துன்பங்களில் இருந்து விடுபட முடியும் என்ற நம்பிக்கையுடன் பாஸ்கா தொடர்புடையது.

ரட்டகும, பல ஐதிகங்களைக் கொண்டதொரு சடங்கு ஆகும். கர்ப்பிணிப் பெண்ணொருத்தி நீர்வீழ்ச்சியில் குளிக்கச் சென்ற போது விழுந்து காயமடைகிறாள். அதன்பின் ராமச்சந்திரனின் அருளால் குணமடைகிறாள்.

இன்னொரு கதையின் படி, பிள்ளைப் பேறில்லாத ஏழு ரித்தி இளவரசிகள் பட்டுத்துணியொன்றைத் தீபங்கர புத்தருக்குப் படையல் செய்வதாகக் கனவு காண்கின்றனர். கனவை நனவாக்கும் விதத்தில் சடங்கொன்றைச் செய்து பிள்ளைப் பேறிற்கான ஆசீர்வாதத்தைப் பெற்றனர். (04 புள்ளிகள்)

(ii) **நிகழ்த்து முறை**

பாஸ்காவில் யேசுவாகப் பாகம் ஏற்பவர் முள்முடி தரித்துச் சிலுவை சுமந்தபடி கல்வாரி மலைக்குச் செல்வார். பிலாத்துவின் வீரர்களாகப் பாகமேற்போர் யேசுநாதரைச் சவுக்கினால் தாக்கியபடி செல்வர். பொதுமக்கள் அழுது அரற்றியவாறு பக்திப் பிரவாகத்துடன் யேசுவின் பின்னால் செல்வர். கல்வார் மலையில் யேசு சிலுவையில் அறையப்படுவார்.

ரட்டயகுமவில் நோயுற்ற பெண் பூங்குடிலுக்கு அழைத்துச் செல்லப்படுவாள். அங்கு களுகுமார என்ற பிசாசின் உருவம் மண்ணால் புனையப்பட்டு . அதற்குப் படையல்கள் வைக்கப்படும். அங்குள்ள ஏழு பலிபீடங்களிலும் பிள்ளைப் பேறற்ற ஏழு ராணிகளுக்கும் பூக்கள், வெற்றலை, பாக்கு, சந்தனம் என்பன படைக்கப்படும். உயிருள்ள கோழியொன்றும் வறுத்த இறைச்சியும் வைக்கப்படும். அதன் பின் துதிப்பாடல்கள் மூலம் துட்டப் பிசாசுகள் வரவழைக்கப்படும். பேயோட்டி தலையில் வெண்ணிறத் துணியொன்றை அணிந்து ஆடுவார். பிசாசின் பிடியில் இருந்து நோயாளியை விடுவிக்கும் வகையில் தேசிக்காய் வெட்டப்படும்.

அதன்பின் சடங்கின் பிரதான நிகழ்வாகிய ‘ரித்திச் சமயமா’ நடைபெறும். அதில் குளியல் முதல் அலங்காரம் வரையிலாள சித்திரிப்புகள் இடம்பெறும். அதன்பிறகு, நடைபெறும் பன்னிரு நடன நிகழ்ச்சிகளில் சடங்கை நிகழ்த்தும் மந்திரவாதி தன்னைப் பெண்ணாக அலங்கரித்திருப்பார். ஏழு ராணிகளும் பட்டுத்துணிகயைப் படையல் செய்வது ஆட்டத்தின் மூலம் பாவனை செய்யப்படும்.

பேயோட்டி, பொம்மையொன்றைக் குழந்தையாகக் கருதிக் கழுவுவார். அதனை நோயாளியிடம் கையளிப்பார். அன்பளிப்புக்களைப் பெறுவார். பிசாசுகள் காலை வரை

படையல்களைச் செய்து ஆடிக்கொண்டிருக்கும். கடவுளின் ஆசீர்வாதத்துடன் பிசாசுகள் விரட்டப்படுவதுடன் சடங்கு நிறைவுறும். (04 புள்ளிகள்)

(iii) **அரங்க ஆற்றுகைப் பண்புகள்**

பாஸ்காவில் **போலச்செய்தல்** - பிரதானமாக இயேசுவின் பாடுகள்,மரணம், உயிர்த்தெழுதல் போன்ற சம்பவங்கள் போலச்செய்யப்படுகின்றன.

**வேடப்புனைவு** - இயேசுவாக, பிலாத்துவாக, யூதாஸாக, சிலுவையில் அறையும் வீரர்களாகக் கிறிஸ்தவ மக்கள் பாகம் ஏற்கின்றனர். பாத்திரங்களுக்கு ஏற்றதாக வேடஉடை, ஒப்பனை செய்யப்பட்டு அவர்கள் குறித்த பாத்திரங்களாக மாற்றப்படுகின்றனர்.
**சித்திரித்தல்:-** இயேசுவின் போதனைகளால் மக்கள் ஈர்க்கப்பெறுதல், காட்டிக்கொடுப்பு, சிலுவையில் அறைய முள்முடி தரிக்கப்பட்டு இழுத்துச் செல்லப்படுதல், சிலுவையில் அறையப்படுதல், உயிர்த்தெழுதல் போன்ற பல சூழமைவுகள், செயல்கள் சித்திரிக்கப்படுகின்றன.

**அரங்கவெளிப் பயன்பாடு:-** தேவாலய வீதியே இங்கு கல்வாரி மலையாக, அம்மலைக்குச் செல்லும் பாதையாகக் கருதப்பெறுகின்றது. எனவே தேவாலயமும் அதனுடன் தொடர்புடைய வீதியுமே இங்கு அரங்கவெளியாகும்.

**ரட்டயகுமவில் போலச்செய்தல்:**

துணியில் தீப்பிடிப்பது, பெண்ணைப் போன்று அலங்கரித்துக்கொள்வது, பட்டுத்துணியைப் படையல் செய்வது, குளித்தல் முதல் தாம்பூலம் தரித்தல் வரையான செயற்பாடுகள், பொம்மையைக் குழந்தையாகப் பாவனை செய்தல் போன்ற செயல்கள் போலச்செய்யப்படுகின்றன.

**வேடப்புனைவு:-** நோய் பீடித்த பெண், களுகுமார, பேயோட்டி போன்ற பாத்திரங்கள் உரிய வேட உடை, ஒப்பனையுடன் தோன்றுவர் பேயோட்டி பெண் வேடம் தரிப்பார்.

**சித்திரிப்பு:-** நோய்பீடித்த பெண்ணாக, பேயோட்டும் சடங்கை நிகழ்த்தும் பூசாரியாக, நோயைப் பரப்பும் பிசாசாகச் சித்திரித்தலே இங்கு முதன்மையானது. போலச்செய்தல் அடிப்படையில் பலவேறு மேற்குறிப்பிட்ட சித்திரிப்புகள் இடம்பெறுகின்றன. பட்டுத்துணியில் தீப்பிடித்தல், பட்டுத்துணியைப் படையல் செய்தல், குளித்தல் முதல் அலங்காரம் செய்தல் வரையிலானதும் மற்றும் தாம்பூலம் தரித்தலும் போன்றன ஊமத்தில் சித்திரிக்கப் பெறுகின்றன.

**அரங்கவெளிப் பயன்பாடு:-** ரட்டயகுமவில் பூங்குடிலே அரங்கவெளியாக அமையும். நோயாளியின் வீட்டு முற்றத்தில் அன்றேல் தனிப்பட்டதொரு வீட்டில் இது அமைக்கப்படும். இயற்கைப் பொருள்களாலும் விளக்குகளாலும் அக்குடில் அலங்கரிக்கப்பெறும். அங்கு வீதிய எனப்படும் பலிபீடமும் ஏழு சிறிய பலிபீடங்களும் அமைக்கப்படும். இவை அரங்கை நினைவூட்டுவதாக அமைகின்றன. (04 புள்ளிகள்)

7. **சிறுகுறிப்பு**

(i). **அரங்க இசை**

அரங்காற்றுகையை முனைப்புறுத்தி அவ்வாற்றுகையைப் பார்ப்போரின் மனதிற்கு நெருக்கமாகக் கொண்டு சென்று, அவர்களது அழகியல் அனுபவத்தை இன்னொரு தளத்திற்கு எடுத்துச் செல்லும் இசை அரங்க இசை ஆகும். அரங்க இசையானது ஆற்றுகைக்கான விடயம், ஆற்றப்படும் முறைமை, ஆற்றுவோர், பார்த்து நயப்போர், ஆற்றப்படும் வெளி ஆகிய அனைத்தையும் இணைக்கிறது. அரங்க இசை வாத்திய இசையாக, மிடற்றிசையாக வரலாம். எவ்வாறெனினும் பார்ப்போரின் கற்பனையை இசை வழியாகத் தூண்டும் பண்பு கொண்டதாக இந்த இசை அமைந்துள்ளது. அது ஆற்றுகையின் மையக்கருவிற்கு அழுத்தம் தருகிறது. ஆற்றுகைக்கான பின்னணியைத் தருகிறது. சொல்லாடல்களை முனைப்புறுத்துகிறது. (04 புள்ளிகள்)

(ii) **நா. சுந்தரலிங்கம்**

நாடகத்தைச் சமூக மாற்றத்திற்கான கருவியாகப் பயன்படுத்திய அரங்க ஆளுமையினருள் ஒருவர். நாடக ஆசிரியராகவும் நெறியாளராகவும் ஒப்பனையாளராகவும் மாத்திரமன்றி நாடகமும் அரங்கியலும் பாடத்திற்கான விரிவுரையாளராகவம் தொழிற்பட்டவர். ஸ்ரனிஸ்லவஸ்கியின் அரங்கை முறையாகக் கையாண்டவர். தமது நாடகத் தயாரிப்புகளில் அரங்கின் அனைத்துக் கூறுகளையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர். அவரது ஆலோசனையின் பேரிலேயே இ. முருகையன் அவர்கள் கடுழியத்தை எழுதினார் எனக் கூறப்படுகின்றது. விழிப்பு நாடகத்தைப் பன்னலத்திரட்டான நாடகமாகவும் அபசுரத்தை அபத்த சாயல் கொண்ட நாடகமாகவும் எழுதினார். பம்மாத்து அவரது வெளிவராத நாடகம் ஆகும்.

(iii) **தொலைக்காட்சி நாடகம்**

சின்னத்திரை வழியாக வருவதும் கமராவை முதன்மையாகக் கொண்டதுமான தொழிநுட்பக் கலைவடிவம் இது. சினிமாவிற்குரிய திரைக்கதையமைப்பைக் கொண்டிராது தொடர்நாடக வடிவில் அமைக்கப்பட்டதாலும் நாடகத தன்மை மேலோங்கியிருப்பதனாலும் தொலைக்காட்சி நாடகம் எனப் பெயர் பெற்றது. யதார்த்தப் பாங்கிலான கதையமைப்பு மற்றும் நடிப்பைக் கொண்டதாக அமைவன. அதிகம் அண்மித்த காட்சிகளைக் கொண்தாகவும் தூரக் காட்சிகளை (Long Shot) அதகம் பயன்படுத்தாததுமான கலைவடிவம். செயற்கையான காட்சி விதானிப்பிற்குப் பதிலாக உரிய களத்திற்கே சென்று ஒளிப்பதிவு செய்யும் தன்மை காணப் பெறுகின்றது. ஒலிக்கலவை, படத்தொகுப்பு போன்ற தொழிநுட்ப விடயங்கள் இதில் முக்கியம் பெறுகின்றன.

(iv) **ஒளிக்குறிப்புக்கள்**

நாடகம் ஒன்று ஆற்றப்படும் வேளையில் ஆற்றுகையை முனைப்புறத்துவதற்காக ஒளிவிதானிப்புச் செய்யப்படுகின்றது. இந்த ஒளிவிதானிப்பு ஆற்றுகையை வேறொரு தளத்திற்கு இட்டுச்சென்று பார்ப்போரின் நயப்பனுபவத்தை மேம்படுத்துகிறது. இத்தகைய ஒளிவிதானிப்புச் செயற்பாட்டை மேற்கொள்ளுகின்ற ஒளிவிதானிப்பாளர் தமது விதானிப்புத் திட்டமிடலின் பொருட்டும் விதானிப்பைச் சீராகத் தடைகளின்றி மேற்கொள்ளவும் சில ஒளிக்குறிப்புக்களைத் தயாரித்து வைத்திருப்பார். அவை, செயற்பாட்டுக் குறிப்பு, வரிக்குறிப்பு, நேரக்குறிப்பு என்பனவாகும்.

அரங்கில் நடைபெறுகின்ற நடிகரின் வரவு, வெளியேறுகை, குறிப்பிட்ட செயல் அன்றேல் இசை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஒளிநினைவுக் குறிப்பு தயாரிக்கப்படும். இதுவே செயற்பாட்டுக் குறிப்பு ஆகும்.

நடிகரது சொல்லாடலில் வருகின்ற குறிப்பிட்ட சொல் அன்றேல் வரிக்கு ஒளியில் செய்யப்பெறும் மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பெறுவது வரிக் குறிப்பு ஆகும்.

நாடக ஆற்றுகையில் காட்சிகள் மாறும் நேரத்தைக் கணக்கிட்டு அதற்கு ஏற்றதாகத் தயாரிக்கப்பெறும் ஒளிக்குறிப்பு நேரக்குறிப்பு ஆகும.

(v) **பார்ஸி நாடகம்**

இசைநாடகத்திற்கு வழங்கப்பெறும் பெயர்களில் ஒன்றே பார்ஸி நாடகம் ஆகும். பார்ஸி நாடகக் கம்பனிகளால் அறிமுகம் செய்யப்பெற்ற கலைவடிவம் என்பதனால் அப்பெயரைப் பெற்றது. தமிழ்நாட்டில் சங்கரதாஸ் சுவாமிகள் பார்ஸி நாடகத்தின் தந்தையாகப் போற்றப்படுகின்றார்.

இந்தியாவில் இருந்து நாட்டுக்கோட்டைச் செட்டிமாரினால் இக்கலைவடிவம் ஈழத்திற்குக் கொண்டு வரப்பட்டது. பாடலே மரங்காக அமைவது தான் பார்ஸி நாடகத்தின் தனித்துவம் ஆகும். பாடலால் நடித்தலும் நடித்தல் வழியாகப் பாடுவதும் இதன் முதன்மையான செயற்பாடு ஆகும். கர்நாடக இசையில் அமைந்த பாடல்கள் இங்கு

பயன்படுத்தப்பெறுகின்றன. ஹார்மோனியம், மிருதங்கம் போன்ற வாத்தியங்கள் பிரதானமாகப் பயன்படுத்தப்பெறுகின்றன. பாடல்களுக்கு இடையே ஊட்டு வசனங்கள் பயன்படுத்தப்பெறும். காட்சித் தட்டிகள் மூலம் காட்சிக்குரிய களங்கள் விளக்கப்படும். இது ஒரு தொழில்சார் கலையாக வளர்த்தெடுக்கப்பட்டது.